**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.28** **நாள்: 04.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பன்றிக் காய்ச்சல் மற்றும் பிளாஸ்டிக் தடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக பன்றிக் காய்ச்சல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரியில் உள்ள பீனிக்ஸ் வணிக வளாகத்தில் பன்றிக் காய்ச்சல் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் இன்று (04.02.2019) நடைபெற்றது. இம்முகாமில் கைகளை முறையாக சோப்பு உபயோகித்து கழுவுவதின் மூலம் வயிற்றுப்போக்கு, காலரா, பன்றிக்காய்ச்சல், டைஃபாய்டு காய்ச்சல் போன்ற பல தொற்றுநோய்கள் வராமல் தடுக்க முடியும். எனவே, அடிக்கடி சோப்பு போட்டு, கைகளை நன்றாக கழுவ வேண்டும் என்று விளக்கப்பட்டு. முறையாக கைகழுவ செய்முறை பயிற்சியும் அளிக்கப்பட்டது. மேலும், ஒருமுறை பயன்படுத்தக் கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள். பிளாஸ்டிக் கைப்பைகள் உட்பட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தக்கூடிய பாக்கு மரத்தட்டுகள், துருப்பிடிக்காத எஃகு தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள், கண்ணாடி குவளைகள், காகித உறிஞ்சு குழல்கள், துருப்பிடிக்காத எஃகு பாட்டில்கள் போன்றவைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது. மேலும், வளாகத்திற்கு வந்த பொதுமக்கள் மற்றும் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு துணிப்பைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், 13வது மண்டல அலுவலர் R. நேருகுமார், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் T.G.சீனிவாசன், சுகாதார ஆய்வாளர் குணசீலன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**

Scanned by CamScanner